மாணவ ஆசிரியர்: ம சதீஸ்வரன்
நெறியாளர்: இணைப் பேராசிரியர் முனைவர் ஆ ரா சிவகுமாரன்
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

# சிங்கப்பூர்த் தொடக்கநிலைத் தமிழ்ப் பாடநூல்களும் பாட வளங்களும் - ஒரு பகுப்பாய்வு (மாணவ ஆசிரியரின் கண்ணோட்டம்)

## அறிமுகம்

இந்த ஆய்வு, சிங்கப்பூர்த் தொடக்கப்பள்ளிகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் பாடநூல்கள் மற்றும் பாட வளங்களையொட்டி அமைந்தது.

கற்றல் கற்பித்தலில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் வகுப்பறை கற்பித்தல் கருவிகளில் பாடநூல் ஒன்றாகும். இது பலதரப்பட்ட கருத்துகளை முறையாகவும் ஆதாரத்துடனும் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்கப் பயனளிக்கும்.

பாடநூலோடு தொடர்புடைய கற்றல் கற்பித்தல் வளங்கள் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் சுவாரசியமிக்கதாகவும் பயன்மிக்கதாகவும் அமைய வழிகோலுகின்றன.

இன்றைய சூழலுக்குத் தேவையான பலவும் புதிய பாடநூலில் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் பல்வேறு பட்டியல்களின் துணையோடு இந்த ஆய்வு எடுத்துரைக்கும்.

## ஆய்வு முறை

- ☑ தரவு சேகரிப்பு
- ☑ தமிழோசை பாடநூல்
- ☑ துணைப்பொருள் பெட்டகம்
- ☑ தேன்தமிழ் பாடநூல்
- ☑ சங்கமம் (இணையம்)
- ☑ IMTL Portal/ Student Learning Space

## ஆய்வின் நோக்கமும் அவசியமும்

'தேன்தமிழ்' தொகுப்பையொட்டி இதுவரையில் ஆய்வாளருக்குத் தெரிந்தவரை எந்த ஆய்வுகளும் வெளிவரவில்லை. பாடநூல்களின் ஆய்வு நிகழும்போது இந்த ஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகளும் பரிந்துரைகளும் பயனளிக்கலாம்.

## ஆய்வின் முடிவுகள்

**1**

**தரமான வளங்கள்.** பாடநூல், பயிற்சிநூல், பெரிய புத்தகம், சிறுவர் கதைநூல், பட அட்டைகள், சொல்லட்டைகள், துணைப்பொருள் பெட்டகம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.

**2**

கற்றல் கற்பித்தலுக்கான 6 களங்களும் பாடநூலில் உள்ள பாடங்களும் நன்கு பொருந்தியுள்ளன.

**3**

**மதிப்பீட்டு அம்சங்கள்.** நடவடிக்கைகளுக்குப் பிறகு மாணவர்களின் மதிப்பீடு புட்குறி இடுவதன் வாயிலாக நிறைவேற்றப்படுகிறது.

**4**

இலக்கியத்தின் ஒருங்கிணைப்பு. செய்யுள் - பழமொழி தவிர சங்க இலக்கியத்தின் ஒருங்கிணைப்பு அதிகம் இல்லை.

**5**

பொருத்தமான எழுத்து அறிமுகம். உயிரெழுத்து அறிமுகமான பின்பு, உயிர்மெய் எழுத்துக்கென தனியொரு பாடம் உண்டு.

**மற்றும் பல...**

ஆர்வமூட்டும் நடவடிக்கைகள், புதிய பாடப்பொருள், இலக்கணக் கூறுகள், பண்பாட்டைச் சுவாரசியமாகக் கற்றுக்கொடுத்தல், தகவல் தொழில்நுட்ப இணைப்புகள்

## முடிவுரை

சிங்கப்பூர்த் தமிழ் மாணவர்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு தமிழ்மொழிப் பாடநூல்கள் மற்றும் பாடவளங்கள் செம்மையான முறையில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த ஆய்வு தேன்தமிழ் பாடநூல் வரிசையைப் பகுத்தாய்ந்து கண்டெடுத்துள்ளது.